


திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் மற்றும் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டம் குற்றாலம் ஸ்ரீ முருகன் மஹாலில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி முதல் தேர்தல் பரப்புரையை தென்காசியில் துவக்கி வைத்தார்.நிகழ்ச்சியை தென்காசி நகர செயலாளர் சாதிர் தொகுத்து வழங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேசுராஜன் வரவேற்புரையாற்றினார்.நிகழ்வில் முன்னாள் எம்.பி.க்கள் ரவிந்திரநாத், கோபாலகிருஷ்ணன்,முன்னாள் எம்எல்ஏ ஐயப்பன்,தொகுதி பார்வையாளர்கள் கலைக்கதிரவன், குணசேகரன்,கழக நிர்வாகிகள் முத்துப்பாண்டி, ஷேக்தாவுது, மா.செல்லத்துரை,ஆறுமுகசாமி, ஷெரீப்,கென்னடி,கனிமொழி, ரஹீம்,அருள்,இராஜேஷ்வரன், தமிழ்ச்செல்வி,அழகு சுந்தரம், முத்தையா,சுடலை,குட்டி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சி நிறைவில் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன் நன்றியுரையாற்றினார்.

### சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரியில் கூட்டுறவு தொடக்க

# வேளாண்மை - ஊரக வளர்ச்சி வங்கிக்கான புதிய அலுவலக கட்டிடம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!



சிங்கம்புணரி, மார்ச் 14-

45 ஆண்டுகள் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கான புதிய அலுவலக கட்டிடத்தை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் திறந்து வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலகம் செயல்பட்டு வருகிறது கடந்த சுமார் 45 ஆண்டுகளாக வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த அலுவலகத்திற்கு அரசு நிலத்தில் புதிய கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஆண்டு ஜூலை மாதம் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையில் பூமி பூஜை போடப்பட்டு கட்டிட பணிகள் தொடங்கியது.பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட்ட கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலக கட்டிட திறப்பு நடைபெற்றது.

விழாவிற்கு வந்த அனைவரையும் புகழேந்தி மற்றும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலக பிரதிநிதிகள் வரவேற்றனர்.

விழாவிற்கு பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து துணைத்தலைவர் இந்தியன் செந்தில் நகர செயலாளர் கதிர்வேல் நகர அவைத் தலைவர் சிவக்குமார் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கூட்டுறவுத்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கான புதிய அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார். தொடர்ந்து குத்து விளக்கேற்றி அலுவலக வளாகத்தை பார்வையிட்டார்.

விழாவில் பேசிய அமைச்சர் பெரியகருப்பன் பேசியதாவது:

கூட்டுறவுவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, பொதுமக்களை பயன்பெறச் செய்து வருகிறார்கள். இந்தியாவில், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறு வனங்களும், வங்கிளும் மிக நீண்ட வரலாற்றையும், சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டதாகத் திகழ்ந்து வருவது குறிப்பிடதக்கதாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்துவது மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் பொருட்டு, அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, அரசின் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. அதில், கூட்டுறவுத்துறை வாயிலாக பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்கள் மற்றும் விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களைவிட சொந்த கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்ற மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிலைப்பாட்டினை உறுதி செய்திடும் வகையில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் செயல்பட்டு வரும் அலுவலகங்களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டும் மற்றும் தேவையான புதிய கட்டிடங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் அரசின் சார்பில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, சிங்கம்புணரி பகுதியில் கடந்த 45 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு, அதனுடைய சேவைகள் வாயிலாக விவசாய பெருங்குடி மக்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர். இவ்வங்கிக்கான கட்டிடம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது. இவ்வலுவலகத்திற்கு புதிய கட்டிடம் ஏற்படுத்திடும் பொருட்டு, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராகவும் மற்றும் நான் வகிக்கும் கூட்டுறவுத்துறையின் அமைச்சர் என்ற முறையிலும் கடந்த மானிய கோரிக்கையின் போது, கூட்டுறவுத்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளில்,

2025-2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அறிவிப்பு எண்: 23ல் DR(L)RMD படி, சிங்கம்புணரி பேரூராட்சி பகுதியில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்பு கதவுடன் கூடிய புதிய அலுவலக கட்டிடம் கட்டப்படும் என்ற அறிவிப்பினை தொடர்ந்து, அதற்கான அரசாணை பெறப்பட்டு, கடந்த 14.7.2025 அன்று அப்புதிய கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டது.

தற்போது, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கான புதிய அலுவலக கட்டிடத்தின் கட்டுமானப் பணி முழுமையாக சிறந்த முறையில் நிறைவு பெற்றுள்ளதைத் தொடர்ந்து, இன்றைய தினம் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், மக்களின் தேவைகள் அறிந்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது மட்டுமன்றி வளர்ச்சி பணிகளும் தமிழகம் முழுவதும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணப்பட்டி கிராமத்தில் ஏற்கனவே உள்ள மின்மாற்றியில் இருந்த மின் இணைப்புக்களை பிரித்து, புதிய மின்மாற்றியை மொத்தம் 55 மின் இணைப்புக்களுக்கென ரூ.6,19,182/ மதிப்பீட்டில் 25 KVA/11 KV திறன் கொண்டு அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், ஜமாத் தலைவர் ராஜா முஹம்மது, குடோன் மணி,எஸ் எஸ் குரூப்ஸ் சந்திரசேகர், செந்தில்குமார், துணைப் பதிவாளர் (பாம்கோ) பாலு, சிங்கம்புணரி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிர்வாக அலுவலர் சுந்தர பெருமாள், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி 59வது வார்டுக்குட்பட்ட அன்சாரி நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டயாலிசிஸ் சிகிச்சை மையத்தை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் நாகராஜன், அரசு ராசாசி மருத்துவமனை முதல்வர் அருள்சுந்தரேஷ்குமார், நகர்நல அலுவலர் அர்விந்த் ஜோதி, உதவி நகர் நல அலுவலர் அபிஷேக், மாமன்ற உறுப்பினர் மகாலெட்சுமி ஆகியோர் உள்ளனர்.

# கலைஞரின் கனவுகளுக்கு வடிவம் தரும் முதல்வர்!



தலைவர் கலைஞர் 2013-ல் நடந்த மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் நம்மிடமிருந்து ஒதுங்கி இருந்த காங்கிரஸ், எதிரில் இருந்த புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி, ஆகியவற்றிடம் உதவி பெற்று கனிமொழி கருணாநிதி அவர்களை வெற்றிபெறவைத்தார்.

நம்மிடம் 23 சட்டமன்ற உறுப்பினர்களும் தே.மு.தி.க. விடம் 29 உறுப்பினர்களும் இருந்த நேரம்.

2014-ல் நடந்த மேலவைத் தேர்தலில் கலைஞர் அவர்கள் தே.மு.தி.க.விற்கு மேலவை உறுப்பினர் ஒன்றை விட்டுத் தருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார். அவர்களிடம் மறு தகவல் வராமல் காலம் தாழ்த்தியதால் கலைஞர் அவர்கள் தி.மு.க. வேட்பாளராக அண்ணன் திருச்சி சிவாவை அறிவித்தார்.

அறிவிப்புக்குப் பின் லட்சிய வேங்கை திருச்சி சிவா தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றார். நானும் உடன் சென்றேன். பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றவுடன் தலைவர் சொன்னார் “சிவா! உன் திறமைக்கு, தியாகத்துக்கு, தகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறாய், ஆனால் தே.மு.தி.க. வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய சூழல் வரும். நீ விட்டுத் தர வேண்டும். அது எதிர்கால 2016 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குத் தோழமையாக அமையும்” என்றார்.

அதற்கு சிவா அவர்கள், “அதுக்கு என்ன அண்ணா? அவர்கள் வந்தால் மகிழும் முதல் ஆள் நான் தான். கண்டிப்பாக வாபஸ் பெறுகிறேன், நீங்கள் சொன்ன பிறகு மறு பேச்சு ஏது” என்று தியாக மனதோடு கூறினார்.

ஏதோ ஒரு சூழல் நெருக்கடி அன்று அந்த உறவு ஏற்படாமல் தடைபட்டது. அன்று தே.மு.தி.க. ஏற்று இருந்தால் தொடர்ந்து தே.மு.தி.க. ஒவ்வொரு தேர்விலும் ஒரு உறுப்பினர் உருவாகி இருப்பார்கள் அ.தி.மு.க. என்ற ஒரு கட்சி இன்று இல்லாமல், காணாமல் போயிருக்கும். தமிழ்நாடு ஆரோக்கியம் பெற்று இருக்கும். தொடர்ந்து தி.மு.க.வே ஆட்சியில் தொடர்ந்து இருக்கும்.

2014-ல் கலைஞர் அவர்கள் கண்ட கனவை, உறவை, அதே எம்.பி. சீட்டை தே.மு.தி.க.விற்கு கொடுத்து 2026 கூட்டணிக்கு அஸ்திவாரம் போட்டு கலைஞரின் கனவை நிறைவேற்றி இருக்கிறார் இன்று தளபதி.

அதேபோல் 2008-ல் தேசிய அளவில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் தோழமை ஓரிடத்தில் நிற்காது என பிரிந்த சூழலில், கலைஞர் அவர்கள் இரு அமைப் போடும் உறவாட விரும்பினார். காங்கிரஸ் இருந்ததால் கம்யூனிஸ்ட் தோழர்கள் தி.மு.க. விடம் இருந்து பிரிந்தார்கள். கலைஞர் மனம் வருந்தியது. இரண்டையும் தி.மு.க.வின் குடையின் கீழ் கொண்டுவர கலைஞர் கனவு கண்டார். அந்த கனவை 2019 தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் நிறைவேற்றினார்கள்.

1978 வாக்கில் கலைஞரையும், எம்.ஜி.ஆரையும், சேர்த்து வைக்க ஒரிசாவிலிருந்த அன்றைய ஒன்றிய அரசின் காபினெட் அமைச்சர் பிஜூ பட்நாயக் தலைமையில் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் இணைப்பது என்று முடிவு செய்தனர். கட்சியின் தலைவராக கலைஞரே தொடர்வது என்றும், முதல்வராக எம்.ஜி.ஆர் தொடர்வது என்றும், கட்சிப் பெயர் தி.மு.க. என்று முடிவு செய்ததாக சொல்லப்பட்டு, பிறகு அந்த செயல் தடைபட்டது. எப்படியோ ஒன்றுபட்ட தி.மு.க.வை உருவாக்க நினைத்த எம்.ஜி.ஆர். மற்றும் கலைஞரின் கனவு அன்று தடைப்பட்டது. கலைஞர் கண்ட அந்த கனவு 2026-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முயற்சியில் பெரும்பகுதி நிறைவேறி இருக்கிறது.

ஆட்சியில் மூன்று முறை முதல்வராக இருந்தவர். கட்சியில் ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பி.எஸ். முதல் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். அ.தி.மு.க.வில் இப்போது உறுப்பினர் குறைவு.

தளபதியின் அடுத்த ஆட்சியில் 2026-2031 நிறைவுக்குள் எள் அளவு, எள்ளின் முனை அளவு, முனையின் மூக்களவு கூட அ.தி.மு.க.வில் உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள்.

அ.தி.மு.க.வின் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவுப்படி தி.மு.க.விலேயே வந்து சேர்ந்து விடுவார்கள்.

2036 -லும் தி.மு.க.வே ஒன்றுபட்டு நிற்கும். வென்று காட்டி மகிழும்.

தி.மு.க.வில் கலைஞர் கண்ட கனவை, தளபதி நிறைவேற்றுகிறார். ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை ஜெயலலிதா கண்ட கனவு “நான் தவறு செய்து விட்டேன், தவறு செய்தமைக்கு மன்னிப்பு கேட்க தயங்க மாட்டேன், மன்னிப்பு கோருகிறேன், இனி என் காலத்துக்கு பின்னும் அ.தி.மு.க. எந்த காலத்திலும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ, உறவோ வைத்துக் கொள்ளாது” என்றார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

ஆனால் எடப்பாடி, ஜெ கனவை சிதைத்து ‘உறவல்ல, அடிமையாகவே மாறி’ அ.தி.மு.க. வை, அடிமை அ.தி.மு.க.வாக மாற்றிவிட்டார்.

“விசுவாசத்திற்கு மறு பெயர் ஓ.பி.எஸ். தான்” என கூறிய ஜெயலலிதா, தான் முதல்வராக முடியாத சூழலில், அ.தி.மு.க. வெற்றி பெற்றால் ஓ.பி.எஸ். தான் முதல்வர் என ஒருமுறைக்கு இருமுறை அடையாளம் காட்டினார். ஜெயலலிதா இல்லாத சூழலில் பன்னீரை முதல்வராக தொடர விடாமல் செய்வது, கனவு கண்ட ஜெயலலிதா அம்மையாருக்கு அசிங்கம் இல்லையா? கனவைச் சிதைக்கலாமா?

தி.மு.க.வை வசைபாடியவர்கள் இன்று, தி.மு.க.வின் புகழுக்கு இசை பாடுகிறார்கள். தி.மு.க.வின் திசைக்கு இசைவு தருகிறார்கள்.

மிட்டாய் கண்டு ஏமாற இருந்த குழந்தைகள் கூட, வேட்டி கட்டிய அன்னை ஸ்டாலின் மடியை கெட்டியாக பிடித்துக் கொண்டனர். தளபதியின் சொற்கண்டு சுவைத்தாருக்கு கற்கண்டும் கைக்கும், கை போகாது, தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும், கை போகாது. தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும் என காங்கிரசார் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஜெயலலிதாவின் கனவைச் சிதைத்து, அ.தி.மு.க.வை, தி.மு.க.வுடன் பகுதி பகுதியாக இணைக்க செயல்படுகிறார் பத்து தோல்வி பழனிசாமி.

தே.மு.தி.க., மக்கள் நீதி மையம், எஸ்.டி.பி.ஐ. என புதிய நண்பர்களைச் சேர்த்து தி.மு.க.வை பலமாக்க கலைஞர் கண்ட கனவை கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் அமைத்து தருகிறார்.



மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட மானகிரி எல்ஜஜி காலனி சிறுவர் பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளை கோ.தளபதி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பூமி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் அறிவுநிதி, வட்டச் செயலாளர் மானகிரி, ராஜேஷ், பொறியாளர் வெங்கடேஷ், பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் மாலதி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.